தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள்

## 2022-2023

## வளர்தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

TEDC - FRANCE
TEDC - FRANCE
TEDC - FRANCE

TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. ஒப்புயர்வற்ற உலக இலக்கியம் எனப் போற்றப்படும் நூல்

அ) நன்னூல் ☐ ஆ) சதுரகராதி ☐

இ) குடும்பவிளக்கு ☐ ஈ ) திருக்குறள் ☐

2. புறப்புண் நாணி வாளுடன் வடக்கிருந்த மன்னன்

அ) சேரன்செங்குட்டுவன் ☐ ஆ) நெடுஞ்செழியன் ☐

இ) பெருஞ்சேரலாதன் ☐ ஈ ) செங்கணான் ☐

3. மூன்றாம் வேற்றுமைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தலை வணங்கினான் ☐ ஆ) நூல் படித்தான் ☐

இ) மகனே! வா ☐ ஈ ) ஆசிரியர் வந்தார் ☐

4. ''நன்றவிழ் பன்மலர் நால நறைபனிப்ப...'' என்பதில் நறை என்பது

அ) தேன் ☐ ஆ) பால் ☐

இ) இதழ் ☐ ஈ ) அரும்பு ☐

5. தமிழிசை என்பது ______________ புணர்ச்சி.

அ) மெய்முன்மெய் ☐ ஆ) உயிர்முன்மெய் ☐

இ) மெய்முன்உயிர் ☐ ஈ ) உயிர்முன்உயிர் ☐

6. ____________ போன்ற ஆரியக் கதைகளைப் படிக்குமாறு தமிழரை ஆரியர் தூண்டினர்.

அ) சிலப்பதிகாரம், திருக்குறள் ☐ ஆ) மூதுரை, நல்வழி ☐

இ) இராமாயணம், மகாபாரதம் ☐ ஈ ) குறுந்தொகை, பரிபாடல் ☐

TEDC

7. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத்தொடர்

அ) பேரும்புகழும் ஆ) கொதிகொதித்து

இ) கிடுகிடு ஈ ) கரியகரிய

8. தமிழில் உள்ள வடமொழிச் சொற்களை நீக்கி மொழித்தூய்மை செய்வதற்கு கடும் முயற்சி செய்தவர்களில் ஒருவர்

அ) மறைமலையடிகள் ஆ) கம்பர்

இ) இளங்கோவடிகள் ஈ ) பவணந்தி

9. எதிர்மறைவினையெச்சம்

அ) சென்ற ஆ) படிக்காது

இ) உண்டு ஈ ) பாடிய

10. மாட்டுச் சவாரியில் சிவலை முதலிடம் பெற்றது. இதில் வந்துள்ள ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர் ஆ) சினையாகுபெயர்

இ) குணவாகுபெயர் ஈ ) காலவாகுபெயர்

11. மதிக்காக எடுக்கப்பட்ட விழா

அ) பொங்கல்விழா ஆ) கலைவிழா

இ) வைரவிழா ஈ ) இந்திரவிழா

TEDC

12. கொழுங்கொடி என்பதைப் பிரித்தெழுதினால்

அ) கொழுமை + கொடி ஆ) கொழு + கொடி

இ) கொழுக் + கொடி ஈ ) கொழுங் + கொடி

TEDC

13. இலக்கிய ஆக்கம் என்பது __________ எனும் ஒரு சுற்று வட்டத்தோடு தொடர்புடையது.

அ) தேர்வாளர், வாசகர், வணிகர், கணிகர் ☐
ஆ) படைப்பாளர், பதிப்பாளர், வாசகர், வணிகர் ☐
இ) பதிப்பாளர், ஆட்சியாளர், மாற்றார், பகைவர் ☐
ஈ) வணிகர், கணக்காளர், வாசகர், மருத்துவர் ☐

14. __________ நூற்றாண்டில் கற்றலும் கற்பித்தலும் முற்று முழுதாகப் பிராமணர் வயமாயிற்று.

அ) 13 ஆம் ☐ ஆ) 12 ஆம் ☐
இ) 9 ஆம் ☐ ஈ) 11 ஆம் ☐

15. பலபொருள் உணர்த்தும் ஓர் உரிச்சொல்

அ) சால ☐ ஆ) உறு ☐
இ) நனி ☐ ஈ) கடி ☐

16. ஆரியரது மேலாண்மையின் கீழ் வாழவிரும்பாத திராவிடர் குடியேறிய இடம்

அ) வேங்கடமலை ☐ ஆ) இமயமலை ☐
இ) குமரிமலை ☐ ஈ) பொதிகைமலை ☐

17. ன் என்ற இறந்தகால இடைநிலை இடம்பெற்றுள்ள வினைச்சொல்

அ) ஓடின ☐ ஆ) போனான் ☐
இ) நாடினான் ☐ ஈ) தேடினர் ☐

18. வி,பி,விபி என்பன

அ) பிறவினை விகுதிகள் ☐ ஆ) தன்வினை விகுதிகள் ☐
இ) பயனிலை விகுதிகள் ☐ ஈ) வியங்கோள் விகுதிகள் ☐

TEDC

19. "இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்..." இங்கு இருசுடர் என்ற சொல் குறிப்பது

அ) வானத்தையும் நிலத்தையும்
ஆ) கடலையும் மழையையும்
இ) கதிரவனையும் மதியையும்
ஈ ) காற்றையும் நீரையும்

20. பெறுநர் என்ற பகுசொல்லின் விகுதி

அ) நர்
ஆ) னர்
இ) பெறு
ஈ ) நார்

21. குற்றியலுகர எழுத்துகளில் இடம்பெறாத எழுத்து

அ) மு
ஆ) சு
இ) கு
ஈ ) பு

22. ஆடை நெய்தார். அது போல பானை

அ) எய்தார்
ஆ) முடைந்தார்
இ) புனைந்தார்
ஈ ) வனைந்தார்

23. "எங்கே சென்றாய் கோடரிக்காம்பே..." இதில் கோடரிக்காம்பு எனக் குறிப்பிடப்படுபவர்

அ) தன்இனத்தைக்காப்பவர்
ஆ) தன்இனத்தைஅழிப்பவர்
இ) தன்இனத்தைப்போற்றுபவர்
ஈ ) தன்இனத்தைப்புகழ்பவர்

24. வைகை ஓரம் சில்லெனக் குளிர்காற்று வீசும். இங்கு வந்துள்ள பொதுமொழி

அ) சில்லென
ஆ) குளிர்காற்று
இ) வைகை
ஈ ) ஓரம்

25. இன்சுவை என்பது

அ) பண்புத்தொகை ☐ ஆ) வினைத்தொகை ☐

இ) உம்மைத்தொகை ☐ ஈ) அன்மொழித்தொகை ☐

26. புறம் பற்றிக் கூறும் நூல்

அ) அகநானூறு ☐ ஆ) கலிங்கத்துப்பரணி ☐

இ) பட்டினப்பாலை ☐ ஈ) குறிஞ்சிப்பாட்டு ☐

27. விதைத்தவன் என்பது

அ) வினையாலணையும்பெயர் ☐ ஆ) செய்வினை ☐

இ) தொழிற்பெயர் ☐ ஈ) குறிப்புவினை ☐

28. தீயாடும் கூத்தன் என அழைக்கப்படுபவர்

அ) சிவன் ☐ ஆ) முருகன் ☐

இ) பிள்ளையார் ☐ ஈ) திருமால் ☐

29. போர் தொடங்க முன் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் சேருங்கள் என்று மன்னன் கூறினான். இச் சொல்லியம்

அ) தனிச்சொல்லியம் ☐ ஆ) கலப்புச்சொல்லியம் ☐

இ) வினாச்சொல்லியம் ☐ ஈ) வியப்புச்சொல்லியம் ☐

30. தமிழின அழிப்புச் செயல்களில் ஒன்று

அ) தமிழ்ப்பெயர்களைச் சூட்டுதல் ☐ ஆ) தமிழ்மொழியில் பேசுதல் ☐

இ) பிறமொழிப்பெயர்களைச் சூட்டுதல் ☐ ஈ) தமிழ்மொழியைக் கற்றல் ☐

புள்ளிகள் 30



TEDC

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இல்லாதவருக்குக் கொடுத்து மகிழ்வதே ஈகை. பசி என்று வந்தவருக்கு வயிறார உணவிட வேண்டும். தீமை செய்தவருக்கும் நன்மையே செய்ய வேண்டும். யாருமற்றோரை அன்புடன் அரவணைக்க வேண்டும். பிறர் துன்பத்தைத் தம் துன்பமாக நினைத்து வருந்தும் பண்பினைக் கொள்ள வேண்டும். இப்பண்புகளைக் கொண்டு வாழ்வோர் உயர்வு அடைவர். உலகில் எந்த நிலமும் தன் பசிக்காக விளைவதில்லை. எந்த மரமும் தனக்காகக் கனிகளைத் தருவதில்லை. இவற்றைப் போல மாந்தரும் தனக்கென வாழாமல், பிறர்க்கென வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வதற்குப் பொறுமை, பரிவு, நன்றி உணர்வு, இன்சொல் பேசுதல் போன்றவை தேவை. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். அதுவே மாந்தநேயம் ஆகும். மாந்தநேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. வள்ளலார் தம் இளம் வயதில் ஒருநாள் நடந்து வந்து கொண்டிருந்தார். நீண்ட தூரம் நடந்த களைப்பினால் ஓய்வெடுக்கவிரும்பி வழியில் இருந்த சத்திரம் ஒன்றின் திண்ணையில் படுத்து உறங்கினார். அப்போது ஒருவன் அங்கு வந்தான். படுத்திருந்த வள்ளலாரின் காதில் கடுக்கன் இருப்பதைக் கண்டு அதனைத் தனதாக்கிக்கொள்ள முடிவெடுத்தான். தங்கக்கடுக்கனை மெதுவாகக் கழற்றினான். அவனது செயலை அறிந்தும் வள்ளலார் கண் மூடியபடியே படுத்திருந்தார். ஒரு கடுக்கனைக் கழற்றியவுடன், மறுகாதில் உள்ள கடுக்கனை அவன் கழற்றுவதற்கு ஏதுவாகத் திரும்பிப் படுத்தார். அவன் அதையும் கழற்றிக் கொண்டு, அந்த இடத்தைவிட்டு அகன்று செல்ல முற்பட்டான். அப்போது வள்ளலார் மென்மையான குரலில், தம்பி, ‘‘இவை இரண்டும் தங்கக்கடுக்கன்கள். குறைந்த விலைக்கு விற்றுவிடாதே’’ மேலும், ‘‘ஒரு கடுக்கனுடன் சென்றால் உன்னைத் திருடன் என எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்கள். எனவேதான் இரண்டு கடுக்கன்களையும் நீ எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பாகத் திரும்பிப் படுத்தேன்’’ என்று வள்ளலார் கூறியதைக் கேட்ட அவன் வெட்கித் தலைகுனிந்தான். இவ்வாறு தம்பொருளைக் கவர்ந்தவரிடங்கூட அன்பு காட்டியவர் வள்ளலார். வள்ளலார் மக்களின் பசிப்பிணியைக் கண்டு உள்ளம் வாடினார். அதனை நீக்க விரும்பினார். அவர் தம் பெருமுயற்சியால் வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தொடங்கி எல்லோருக்கும் உணவளித்தார். பசித்தோருக்கு உணவு வழங்கும் வள்ளலாரின் மாந்தநேயச் செயல் வடலூரில் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

TEDC

1. வாழ்வில் உயர்வடைவதற்கு எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்?

2. கடுக்கனைக் கழற்றியவனிடம் வள்ளலார் கூறியது யாது?

3. வள்ளலாரின் மாந்தநேயச் செயல் என்ன?

4. மாந்தன் பிறருக்கென வாழ்வதற்கு அகத்தியமான பண்புகள் எவை?

5. வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தொடங்கியவர் யார்?

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

TEDC

1. குறிஞ்சிக் காட்சியைத் தென்றலுடன் பொருத்தித் தந்த புலவர் யார்?

2. யாழ்ப்பாண அரசு ஆரியவிரவலுக்கு உட்பட்டமைக்கான சான்றுகள் எவை?

3. நெடுஞ்செழியன் ஏழு மன்னர்களையும் போரில் வென்ற இடம் எது?.

4. முந்நீரையும் தருக.

5. ''ஆடை களைந்து இளையோரை
அம்மண மாக்கிக் கண்கட்டிக்
காடைத் தனமாய்ச் சுடும்காட்சி
காண நெஞ்சம் பதைக்கிறது ...'' என்ற அடிகளை உமது உரைநடையில்
எழுதுக.

6. எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள் என அழைக்கப்படுபவர்கள் யார்?

TEDC

7. தமிழரது சைவவழிபாட்டில் வேள்வி செய்யும் முறை யாரால் புகுத்தப்பட்டது?

புள்ளிகள் 10

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

TEDC

1.



2. இளமை நாளின் கனவையெல்லாம்
எருவாய் மண்ணில் புதைத்தவரே

புள்ளிகள் 10

TEDC

**5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

அழகிய மரச்சோலை அங்கே மா பலா வாழை என்பனவும் முப்பது ஆண்டுகளாக நிற்கும் வேப்ப மரம், வேங்கை மரம் எனப் பல வகை மரங்களும் மல்லிகை, செவ்வந்தி, முல்லை, சூரியகாந்தி எனப் பல பூமரங்களும் பூத்துக் குலுங்குகின்றன. தேக்கு மரங்களும் வரிசைவரிசையாகக் காணப்படுகின்றன. தேக்கு பூக்கும் பருவம் என்பதால் வெண்ணிறத்தில் பூத்திருந்த தேக்கம்பூக்கள் சோலைக்கு அழகூட்டுகின்றன. கத்துங்குயிலோசை செவிகளுக்கு இனிமையைத் தருகின்றது. சோலையின் நடுவே வாய்க்கால்களில் நீர் ஓடுகின்றது. கதிரவனின் ஒளி எட்டுத் திக்கும் பரவி மரங்களின் நடுவே கீற்றுகளாகத் தெரிகின்றது. என்னே! அழகு இம் மரச்சோலை.

1. உயிர்த்தொடர்க்குற்றியலுகரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

   ________________________________________

2. மரபுவழு ஒன்று தருக.

   ________________________________________

3. பொதுமொழி ஒன்று தருக.

   ________________________________________

4. உம்மைத்தொகை ஒன்று தருக.

   ________________________________________

5. கீற்று என்ற சொல் எவ்வகைக் குற்றியலுகரம்?

   ________________________________________

6. சிறப்புப்பெயரோடு பொதுப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

   ________________________________________

TEDC

7. மரச்சோலை என்பதைப் பிரித்தெழுதுக.

______________________________

8. பகாச்சொல் இரண்டு தருக.

______________________________

9. ஓடுகின்றது என்பதைப் பகுத்து எழுதுக.

______________________________

10. இன் உருபு ஏற்ற சொல் ஒன்று தருக.

______________________________

புள்ளிகள் 10

**ஆ) 1.** பின்வரும் சொல்லியங்களின் ஆகுபெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

1. மாரி விளைச்சலால் பொருட்கள் மலிந்தன. ______________

2. அம்மா வறுவல் செய்தார். ______________

3. உலகம் துன்பத்தினால் அல்லற்படுகின்றது. ______________

புள்ளிகள் 03

**2.** நிரற்கூட்டைப் பொருத்தமாக நிரப்புக.

1. சேவல்கள் காலையில் கூவுகின்றன.
2. என்றும் அவன் நல்லவனே.
3. கண்ணன் குழல் ஊதினான்.
4. மாதவி ஆடலில் வல்லவள்.

| **தெரிநிலைவினை** | **குறிப்புவினை** |
|---|---|
| | |
| | |

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

TEDC

மக்கள் பூனை எவ்வழி

எலி காலை ஆழமறியாமல்

அடுப்பங்கரை வளையானாலும் போட்டாலும் ஆற்றில்

சூடுகண்ட அளந்து விடாதே அவ்வழி

போடு நாடாது

தனிவளை மன்னன் வேண்டும்

1. மன்னனது ஆட்சிமுறையையே மக்களும் பின்பற்றுவர்.

______________________________

2. சிறிதாயினும் தனக்கென ஒரு வாழிடம் வேண்டும்.

______________________________

3. எந்தச் செயலையும் அளவறிந்து செய்.

______________________________

4. எதையும் ஆராய்ந்து அறிந்த பின்பு செய்தல் வேண்டும்.

______________________________

5. பட்டறிவு பயன் தரும்.

______________________________

TEDC

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

முகநூல் ஒரு தொடர்பு ஊடகம் ஆகும். முகநூலில் மிகவும் அகத்தியமான செய்திகளை மற்றவர்களுடன் மிக விரைவாகப் பரிமாறிக் கொள்கின்றோம். நாம் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் ஏனைய நிகழ்வுகளில் எடுத்த நிழற் படங்களை முகநூலில் பகிர்கின்றோம். உலகில் எங்கு வாழ்ந்தாலும் எமது உறவினர்கள், நண்பர்கள் இப்படங்களைப் பார்த்து அறிந்து கொள்கின்றனர். முகநூல் எல்லோருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தாலும் நாம் முகநூலைத் தவறான வழிகளில் பயன்படுத்தினால் குமுகாயச் சீர்கேடுகள் ஏற்படும்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 5

8) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழர் வீரம்
- ஆரியம் ஊடுருவலால் தமிழரின் இலக்கியத்திலும் இறைநெறியிலும் ஏற்பட்ட மாற்றங்கள்
- தாய்மொழிக்கல்வியின் அகத்தியம்
- தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரும் எம் உறவுகளும்

புள்ளிகள் 15